# கள்ளக்குறிச்சி நகராட்சி

கள்ளக்குறிச்சி நகராட்சியின் நகர் மன்ற அவசரக் கூட்டம் 11.04.2022 ஆம் தேதி திங்கள் கிழமை காலை 11.00 மணிக்கு நகர் மன்ற தலைவர் தலைமையில், நகராட்சி நகர் மன்ற கூட்ட அரங்கில் நடைப்பெற்ற கூட்ட நடவடிக்கைகள்.

## கூட்டநடவடிக்கை பொருள்கள்

**பொருள் எண்.** 01

தமிழக அரசால் அமைக்கப்பட்ட சொத்துவரி சீராய்வு செய்வதற்கான குழு பல்வேறு காரணிகளை ஆராய்ந்து தற்போது சொத்துவரி சீராய்வு செய்வது அவசியம் என அரசிற்கு பரிந்துரைத்துள்ளது.

15–ஆவது மத்திய நிதி ஆணையம், 2022–2023–ம் ஆண்டு முதல் உள்ளாட்சி அமைப்புகளுக்கான மான்யம் பெறுவதற்கு, மொத்த ஆண்டு மதிப்பில் சொத்துவரி விகிதம் (Floor rate i.e .Rate of Taxation) எவ்வளவு என அறிவிக்கை வெளியிட வேண்டும் எனவும், மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சிக்கு ஏற்றவாறு சொத்து வரி வசூலில் முன்னேற்றம் காண்பிக்க வேண்டும் எனவும் நிபந்தனைகள் விதித்துள்ளது. மேலும், தூய்மை இந்தியா திட்டம் 2.0 மற்றும் அம்ரூட் 2.0 ஆகிய திட்டங்களுக்கு மானிய நிதி பெறுவதற்கு சொத்து வரி/ காலிமனைவரி சீராய்வு செய்வது அவசியமாகிறது.

அரசாணை(நிலை)எண்.73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.19.07.2018 மற்றும் அரசாணை(நிலை) எண்.76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.26.07.2018 ஆகியவற்றில் சொத்து வரி/ காலிமனைவரி பொது சீராய்வு மேற்கொள்ள ஆணையிடப்பட்டு, பின்பு அரசாணை(நிலை)எண்.150 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.19.11.2019–ன் படி சொத்து வரி சீராய்வானது நிறுத்தி வைக்கப்பட்டு, சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல்கள் வழங்க குழுவும் அமைக்கப்பட்டது. மேலும், இக்குழுவானது சொத்து வரி/ காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான பரிந்துரைகள் வழங்குவதற்கு முன்பு, சந்தை மதிப்பு குறியீடு, பணவீக்கம், செலவு பணவீக்க குறியீடு, மொத்த உள்நாட்டு உற்பத்தி போன்றவற்றை பரிசீலித்து, பொருளாதார குறியீடுகள் உயர்ந்துள்ள நிலையில் சொத்து வரியில் எந்த உயர்வும் இல்லாததோடு, உள்ளாட்சி அமைப்புகளின் சொந்த வருமானத்திலும் எந்த உயர்வும் இல்லாமல் உள்ளதாகவும், மொத்த வருமானத்தில் சொந்த வருமானத்தின் பங்கு பெருமளவு குறைந்துள்ளதாகவும் அறிக்கை வெளியிட்டுள்ளது.

தற்போது பொருளாதார குறியீடு உயர்ந்துள்ளதற்கு ஏற்ப, நகராட்சிகளின் நிர்வாகச் செலவினம் பலமடங்கு உயர்ந்துள்ளது. மேலும், நகராட்சிகளில் அதிகரித்துள்ள நிதித்தேவை, பொது மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய அடிப்படை வசதிகள், 15வது மத்திய நிதிக்குழுவின் மான்யம் மற்றும் இதர ஒன்றிய அரசின் திட்டங்களுக்கான நிதி பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள தகுதிகள் போன்றவற்றை கருத்திற்கொண்டும் தமிழ்நாட்டிலுள்ள நகராட்சிகளில் கீழ்க்கண்டவாறு சொத்து வரி/காலிமனைவரி சீராய்வு செய்யலாம் என சொத்து வரி சீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல் குழு பரிந்துரைத்துள்ளது.

சொத்து வரி / காலிமனை வரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் வளர்ச்சிக்கு தேவைப்படும் நிதி ஆகியவற்றை கருத்திற்கொண்டு 2022–2023 முதலாம் அரையாண்டு (01.04.2022) முதல் சொத்து வரி பொது சீராய்வு செய்ய வேண்டும்.

நகராட்சிப் பகுதிகளில் கட்டப்படும் குடியிருப்பு கட்டடங்களுக்கு அவற்றின் அமைவிடம், கட்டுமானத்தின் தன்மை மற்றும் பயன்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் கட்டடங்களின் பரப்பளவுக்கு ஏற்றவாறு 4 வகைகளாக பிரித்து வெவ்வேறு மண்டல மதிப்புகள் நிர்ணயம் செய்து சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு செய்ய வேண்டும்.

சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அரசாணை (நிலை) எண்.52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை நாள் 30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022 ஆகியவற்றில் கீழ்கண்டவாறு அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சொத்துவரி:

### குடியிருப்பு கட்டடங்கள் (Residential Building):

| பரப்பளவு (ச.அடி) | உயர்வு செய்வதற்கானகாரணி |
|---|---|
| <=600 | 1.25 |
| 601-1200 | 1.50 |
| 1201-1800 | 1.75 |
| >1800 | 2 |

### குடியிருப்பு அல்லாத கட்டடங்கள் (Non-Residential Building):

| வகைப்பாடு | உயர்வு செய்வதற்கானகாரணி |
|---|---|
| தொழிற்சாலைகள் | 1.75 |
| வணிக பயன்பாட்டு கட்டடங்கள் | 2 |
| சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்கள் | 1.75 |

**<u>மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்வது சம்மந்தமாக மேற்கண்ட பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள உயர்வு காரணிகள் கீழ்கண்டவாறு விவரிக்கப்படுகிறது:</u>**

1) 600 சதுரஅடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
2) 601 முதல் 1200 சதுரஅடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
3) 1201 முதல் 1800 சதுர அடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
4) 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
5) வணிகப் பயன்பாட்டு கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 100% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
6) தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.

**<u>காலிமனை வரி சீராய்வு:</u>**

காலிமனை வரிவிதிப்பிற்கு,1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யப்பட வேண்டும். மேலும், சொத்து வரிவிதிப்பு செய்யும் போது கட்டடத்தின் பரப்பளவிற்கு இரண்டு மடங்கிற்கு மேல் உள்ள காலியிடத்திற்கு சொத்து வரியுடன் சேர்த்து காலிமனை வரி வரிவிதிப்பு செய்யப்பட வேண்டும்.

**<u>தன்னிச்சையான வருடாந்திர சொத்துவரி சீராய்வு:</u>**

ஏற்கனவே உள்ள சொத்துவரி / காலிமனை வரியில், ஆண்டுதோறும் 6 % உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி / காலிமனை வரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யப்பட வேண்டும்.

அதுபோலவே, தற்போது வரை மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்யப்படாமல் விடுபட்டுள்ள சாலைகள், தெருக்கள், சந்துகள் போன்றவை அவற்றின் அமைவிடங்களுக்கு ஏற்றவாறு பட்டியலிட்டு மண்டலங்களும், மண்டல மதிப்புகளும் நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

மேலும்கள்ளக்குறிச்சிநகராட்சியில் தற்போதுள்ள நிலையில் கீழ்கண்டவாறு கடன் தொகை / நிதித்தேவை உள்ளது.

| வ. எண். | செலவின வகைப்பாடு | தற்போதுள்ள நிலையில் தேவைப்படும் நிதி (Current Liabilities) (ரூ. கோடியில்) |
|---|---|---|
| 1 | செலுத்தப்பட வேண்டிய நிலுவை மின்கட்டணம் | 0.80 |
| 2 | பிற துறைகளுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை விபரம் | 0.40 |
| 3 | திரும்ப செலுத்த வேண்டிய கடன் நிலுவை விபரம் (டுபிட்கோ, டுபிசெல், பிற) | 0.45 |
| 4 | பணியாளர்களுக்கு வழங்கப்படவேண்டிய ஓய்வுக்கால பணப்பயன், ஓய்வூதியம் மற்றும் தற்போது பணிபுரியும் பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய சேமநல நிதி , நகராட்சியின் பங்குத்தொகை மற்றும் பிற பணப்பயன்கள் ( நிலுவைத் தொகை) | 0.25 |
| மொத்தம் | | 1.90 |

விலைவாசி உயர்வு, பணியாளர்களின் ஊதிய உயர்வு, பொதுமக்களுக்கு செய்ய வேண்டிய அடிப்படை தேவை மற்றும் நகராட்சியில் ஏற்படுத்தப்பட்டுள்ள அடிப்படை கட்டமைப்புகளை மேம்படுத்தி பராமரிப்பு செய்தல் போன்றவற்றிற்கு தேவைப்படும் கூடுதல் செலவினம், நகராட்சி செலுத்த வேண்டிய கடன் தொகை மற்றும் பிற துறைகளுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத்தொகை ஆகியவற்றை கருத்தில் கொண்டும், பொதுமக்களுக்கு சிறப்பான சேவைகளை அளிக்க ஏதுவாகவும், மேற்கண்ட அரசாணையில் அறிவுறுத்தியுள்ளவாறும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, பிரிவு 81–A மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை, ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022 ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகள் பின்பற்றியும், கள்ளக்குறிச்சி நகராட்சியில் கீழ்கண்டவாறு சொத்து வரி/காலிமனைவரி உயர்வு செய்து பொது சீராய்வு மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது.

1) 600 சதுரஅடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

2) 601 முதல் 1200 சதுரஅடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

3) 1201 முதல் 1800 சதுரடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

4) 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

5) வணிகப் பயன்பாட்டுக் கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்து வரியில் 100% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

6) தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

7) காலிமனை வரிவிதிப்பிற்கு,1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யலாம்.

8) ஏற்கனவே உள்ள சொத்துவரி / காலிமனைவரியில், ஆண்டுதோறும் 6 % உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி / காலிமனை வரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யலாம்.

மேலும் தற்போது வரை மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்யாமல் விடுபட்டுள்ள சாலைகள் / தெருக்கள் / சந்துகள் ஆகியவற்றிற்கு கீழ்கண்டவாறு மண்டலங்கள் நிர்ணயம் செய்யலாம்.

| வ. எண் | சதுர அடிக்கான அடிப்படை மதிப்பு | | |
|---|---|---|---|
| | மண்டலம் | தற்போது உள்ள மண்டல மதிப்பு | உயர்த்தப்பட வேண்டிய மண்டல மதிப்பு |
| 1 | A | 0.50 பைசா | 0.75 பைசா |
| 2 | B | 0.30 பைசா | 0.50 பைசா |
| 3 | C | 0.20 பைசா | 0.30 பைசா |

## A,B,Cவகைப்படுத்தப்பட்டுள்ள தெருக்களின் விபரங்கள்

| வ. எண் | மண்டலம் | தெருக்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | A | 189 |
| 2 | B | 203 |
| 3 | C | 18 |
| மொத்தம் | | 410 |

# கள்ளக்குறிச்சி நகராட்சி

| வ. எண் | வார்டு எண் | தெருவின் பெயர் | மண்டல மதிப்பு |
|---|---|---|---|
| 1 | 1 | கச்சிராயப்பாளையம் தெரு | A |
| 2 | 1 | கிருஷ்ணாநகர்(கே.பி.எம்.ரோடு) | B |
| 3 | 1 | அம்மன் நகர் | B |
| 4 | 1 | அம்மன் நகர் விரிவாக்கம் | B |
| 5 | 1 | ஆசிரியார் நகர் | B |
| 6 | 1 | சண்முகா நகர் | B |
| 7 | 1 | படையப்பா நகர் | B |
| 8 | 1 | காஜா நகர் | B |
| 9 | 1 | பாபா நகர் | B |
| 10 | 1 | மிளகாய் தோட்டம் | B |
| 11 | 1 | தீபெட்டி தொழிற்சாலை | B |
| 12 | 1 | RD நகர் | B |
| 13 | 1 | இந்திரா நகர் (வாய்க்கால் கரை) | B |
| 14 | 1 | திருமலை திருப்பதி நகர் | B |
| 15 | 1 | திரு.வி.க. நகர் - 1 | B |
| 16 | 1 | திரு.வி.க. நகர் - 2 | B |
| 17 | 1 | வி.ஜ.பி நகர் | A |
| 18 | 1 | ஸ்ரீ முந்தையாலு நகர் | B |
| 19 | 1 | கொங்கு நகர் | B |
| 20 | 1 | ஸ்ரீ மகாலட்சுமி நகர் | B |
| 21 | 1 | ஜெ.பி.நகர் | B |
| 22 | 1 | கோவிந்தசாமி நகர் | B |
| 23 | 2 | பசுங்காய மங்கலம் ரோடு | B |
| 24 | 2 | மோரைப்பாதை | B |
| 25 | 2 | வ.உ.சி நகர் 2வது மெயின் தெரு | B |
| 26 | 2 | வ.உ.சி.நகர் 3வது மெயின் தெரு | B |
| 27 | 2 | வ.உ.சி நகர் 4வது மெயின் தெரு | B |
| 28 | 2 | வ.உ.சி நகர் 5வது மெயின் தெரு | B |
| 29 | 2 | வ.உ.சி நகர் 6வது மெயின் தெரு | B |
| 30 | 2 | வ.உ.சி நகர் 7வது மெயின் தெரு | B |
| 31 | 3 | ஆஸ்பிட்டல் ரோடு | A |
| 32 | 3 | கேசவலு நகர் | B |
| 33 | 3 | கே.பி.ஆர் நகர் | B |
| 34 | 3 | வ.உ.சி நகர் 1வது மெயின்தெரு | B |
| 35 | 3 | வ.உ.சி.நகர்1வது மெயின் தெரு 1குறுக்கு தெரு | B |
| 36 | 3 | வ.உ.சி.நகர்1வது மெயின் தெரு 2வது குறுக்கு தெரு | B |
| 37 | 3 | வ.உ.சி.நகர்1வது மெயின் தெரு 3குறுக்கு தெரு | B |

| | | | |
|---|---|---|---|
| 38 | 3 | வ.உ.சி.நகர்1வது மெயின் தெரு 4குறுக்கு தெரு | B |
| 39 | 3 | வ.உ.சி.நகர்1வது மெயின் தெரு 5குறுக்கு தெரு | B |
| 40 | 3 | வ.உ.சி.நகர்1வது மெயின் தெரு 6குறுக்கு தெரு | B |
| 41 | 3 | வ.உ.சி.நகர்1வது மெயின் தெரு 7குறுக்கு தெரு | B |
| 42 | 3 | வ.உ.சி.நகர்1வது மெயின் தெரு 8குறுக்கு தெரு | B |
| 43 | 3 | வ.உ.சி நகர் (எம்.ஜி.ஆர் நகர் 1வது தெரு) | B |
| 44 | 3 | வ.உ.சி நகர் (எம்.ஜி.ஆர் நகர் 2வது தெரு) | B |
| 45 | 3 | வ.உ.சி நகர் (எம்.ஜி.ஆர் நகர் 3வது தெரு) | B |
| 46 | 3 | வ.உ.சி நகர் (எம்.ஜி.ஆர் நகர் 4வது தெரு) | B |
| 47 | 3 | வ.உ.சி நகர் (எம்.ஜி.ஆர் நகர்5 வது தெரு) | B |
| 48 | 3 | வ.உ.சி நகர் (எம்.ஜி.ஆர் நகர் 6வது தெரு) | B |
| 49 | 3 | வ.உ.சி நகர் (எம்.ஜி.ஆர் நகர் 7வது தெரு) | B |
| 50 | 3 | வ.உ.சி நகர் (எம்.ஜி.ஆர் நகர் 8வது தெரு) | B |
| 51 | 3 | வ.உ.சி நகர் (எம்.ஜி.ஆர் நகர் 9வது தெரு) | B |
| 52 | 3 | வ.உ.சி நகர் (எம்.ஜி.ஆர் நகர் 10வது தெரு) | B |
| 53 | 3 | எம்.ஜி,ஆர்.நகர் (கிருஷ்ணா நகர் 1) | B |
| 54 | 3 | எம்.ஜி,ஆர்.நகர் (கிருஷ்ணா நகர் 2) | B |
| 55 | 4 | கா.மாமனந்தல் ரோடு | B |
| 56 | 4 | கா.மாமனந்தல் காலனி | B |
| 57 | 4 | A.K.T.நகர் | B |
| 58 | 4 | காட்டுப்புரித்தக்கா | B |
| 59 | 5 | காந்தி ரோடு மெயின் ரோடு இடது புறம் பகுதி மட்டும் | A |
| 60 | 5 | காந்தி ரோடு மெயின் ரோடு வலதுபுறம் பகுதி | A |
| 61 | 5 | ராஜா நகர் மெயின் தெரு | A |
| 62 | 5 | ராஜா நகர் 2வது தெரு வலது | A |
| 63 | 5 | ராஜா நகர் 3வது தெரு வலது | A |
| 64 | 5 | ராஜா நகர் 4வது தெரு வலது | A |
| 65 | 5 | ராஜா நகர் 3வது தெரு குறுக்கு சந்து | A |
| 66 | 5 | ராஜா நகர் முதல் தெரு இடது | A |
| 67 | 5 | ராஜா நகர் 2வது குறுக்கு தெரு | A |
| 68 | 5 | ராஜா நகர் 2வது தெரு இடது | A |
| 69 | 5 | ராஜா நகர் முதல் குறுக்கு தெரு | A |
| 70 | 5 | தீர்த்தாலு நகர் மெயின் தெரு | A |
| 71 | 5 | ராஜா நகர் தியேட்டர் பின்புறம் முதல் தெரு | A |
| 72 | 5 | ராஜா நகர் தியேட்டர் பின்புறம் 2வது தெரு | A |
| 73 | 5 | நடுத்தக்கா (முதல் தெரு) | A |
| 74 | 5 | நடுத்தக்கா (2வது தெரு) | A |
| 75 | 5 | நடுத்தக்கா (மீன் மார்க்கெட் தெரு) | A |
| 76 | 5 | காந்தி ரோடு (மெயின் வலது குறுக்கு தெரு) | A |
| 77 | 5 | காந்தி ரோடு (மெயின் வலது 2வது குறுக்கு தெரு) | A |
| 78 | 5 | ஆர்.கே.ரைஸ்மில் தெரு | A |
| 79 | 5 | வாய்க்கால் மேட்டுத் தெரு (மேற்கு முதல் தெரு) | A |

| | | | |
|---|---|---|---|
| 80 | 5 | வாய்க்கால் மேட்டுத் தெரு (மேற்கு 2வது தெரு) | A |
| 81 | 6 | காந்தி ரோடு (மெயின் ரோடு இடது புற பகுதிமட்டும்) | A |
| 82 | 6 | நேப்பால் தெரு (மெயின் தெரு) | A |
| 83 | 6 | நேப்பால் தெரு (முதல் குறுக்கு தெரு இடது) | A |
| 84 | 6 | நேப்பால் தெரு(2வது குறுக்கு தெரு இடது) | A |
| 85 | 6 | நேப்பால் தெரு (3வது குறுக்கு தெரு இடது) | A |
| 86 | 6 | நேப்பால் தெரு (ஏரிக்கரை மூலைப்பகுதி) | A |
| 87 | 6 | கச்சேரி ரோடு (மெயின் ரோடு மேற்கு புற பகுதி மட்டும்) | A |
| 88 | 6 | கோட்டை மேடு (மெயின் ரோடு மேற்குப்புற பகுதி மட்டும்) | A |
| 89 | 6 | சங்கராபுரம் ரோடு (மெயின் ரோடு மேற்குப்புற பகுதி மட்டும்) | A |
| 90 | 6 | ஜோதி வள்ளலார் தெரு | A |
| 91 | 6 | சக்தி விநாயகர் கோவில் தெரு | A |
| 92 | 6 | வாய்க்கால் மேட்டுத் தெரு (மெயின் தெரு) | B |
| 93 | 6 | வாய்க்கால் மேட்டுத் தெரு ( முதல் குறுக்கு சந்து வலது) | B |
| 94 | 6 | வாய்க்கால் மேட்டுத் தெரு(2வது குறுக்கு சந்து வலது) | B |
| 95 | 7 | கச்சேரி ரோடு (மெயின் ரோடு வலது) | A |
| 96 | 7 | கோட்டைமேடு (மெயின் ரோடு வலது) | A |
| 97 | 7 | சங்கராபுரம் ரோடு (மெயின் ரோடு வலது) | A |
| 98 | 7 | சங்கராபுரம் ரோடு (ஜி.கே.நகர்) | A |
| 99 | 7 | கோட்டை மேடு மகளிர் காவல் நிலைய தெரு | A |
| 100 | 7 | கோட்டைமேடு பழைய காவல் நிலைய தெரு | A |
| 101 | 7 | கோட்டை மேடு பழைய காவல் நிலைய குறுக்கு தெரு | A |
| 102 | 7 | கோட்டைமேடு பழைய காவல் நிலைய குறுக்கு தெரு மேற்கு | A |
| 103 | 7 | கோட்டைமேடு பழைய காவல் நிலைய 2வது தெரு | A |
| 104 | 7 | கோட்டைமேடு மெயின் ரோட்டில் குறுக்கு சந்து வலது | A |
| 105 | 7 | கோட்டை மேடு விநாயகர் கோவில் தெரு | A |
| 106 | 7 | கோட்டைமேடு நந்தவன தெரு | A |
| 107 | 7 | கோட்டைமேடு ஜோசியகாரர் தெரு | A |
| 108 | 7 | கோட்டைமேடு மெயின் தெரு (மேற்கு கிழக்கு) | A |
| 109 | 7 | கோட்டைமேடு மெயின் தெருவில் தென்புற சந்து | A |
| 110 | 7 | கச்சேரி ரோடு (தாலுக்கா அலுவலகம் ரோடு) | A |
| 111 | 7 | சிறுவங்கூர் ரோடு (மெயின் ரோடு மேற்கு புறம்) | B |
| 112 | 7 | சிறுவங்கூர் ரோடு (மேற்கு புற முதல் குறுக்கு தெரு) | B |
| 113 | 7 | சிறுவங்கூர் ரோடு (மேற்குப்புற 2வது குறுக்கு தெரு) | B |
| 114 | 7 | சிறுவங்கூர் ரோடு (மேற்குப்புற 3வது குறுக்கு தெரு) | B |
| 115 | 7 | சிறுவங்கூர் ரோடு(3வது குறுக்கு தெருவில் மேற்குப்புற தெரு) | B |
| 116 | 7 | சிறுவங்கூர் ரோடு (3வது குறுக்கு தெருவில் தெற்குப்புற சந்து) | B |
| 117 | 7 | சிறுவங்கூர் ரோடு (மேற்குப்புற 4வது தெரு) | B |
| 118 | 7 | மேற்குப்புற 4வதுதெருவில் தென்புற சந்து | B |
| 119 | 7 | ராஜகணபதி நகர் | B |
| 120 | 8 | சிறுவங்கூர் ரோடு வலது மெயின் ரோடு | B |
| 121 | 8 | சிறுவங்கூர் ரோடு வலது முதல் குறுக்கு சந்து | B |

| | | | |
|---|---|---|---|
| 122 | 8 | சிறுவங்கூர் ரோடு வலது முதல் குறுக்கு தெரு | B |
| 123 | 8 | சிறுவங்கூர் ரோடு வலது 2வது குறுக்கு தெரு | B |
| 124 | 8 | சிறுவங்கூர் ரோடு வலது 3வது குறுக்கு தெரு | B |
| 125 | 8 | சிறுவங்கூர் ரோடு வலது 4வது குறுக்கு தெரு | B |
| 126 | 8 | சிறுவங்கூர் ரோடு வலது 4வது குறுக்கு தெரு 1வது தெரு | B |
| 127 | 8 | சிறுவங்கூர் ரோடு வலது 4வது குறுக்கு 1வது சந்து | B |
| 128 | 8 | சிறுவங்கூர் ரோடு வலது 4வது குறுக்கு 2வது சந்து | B |
| 129 | 8 | சிறுவங்கூர் ரோடு வலது 5வது குறுக்கு தெரு | B |
| 130 | 8 | சிறுவங்கூர் ரோடு வலது 6வது குறுக்கு தெரு | B |
| 131 | 8 | கருணாபுரம் மேட்டு தெரு மெயின் | B |
| 132 | 8 | கருணாபுரம் கிழக்கு தெரு மெயின் | B |
| 133 | 8 | கருணாபுரம் மேட்டு தெரு 1வது இடது | B |
| 134 | 8 | கருணாபுரம் மேட்டு தெரு 2வது இடது | B |
| 135 | 8 | கருணாபுரம் மேட்டு தெரு | B |
| 136 | 8 | கருணாபுரம் மேட்டு தெரு 3வது இடது | B |
| 137 | 8 | கருணாபுரம் கிழக்கு தெரு 1வது இடது | B |
| 138 | 8 | கருணாபுரம் கிழக்கு தெரு 2வது இடது | B |
| 139 | 8 | அரிசன காலனி மேட்டு தெரு | B |
| 140 | 8 | அரிசன காலனி கிழக்கு தெரு | B |
| 141 | 8 | அரிசன காலனி வடக்கு 1வது தெரு | B |
| 142 | 8 | அரிசன காலனி வடக்கு 2வது தெரு | B |
| 143 | 8 | அரிசன காலனி வடக்கு தெரு குறுக்கு (மேற்கு புறம்) | B |
| 144 | 8 | அரிசன காலனி வடக்கு தெரு குறுக்கு (1வது கிழக்கு புறம்) | B |
| 145 | 8 | அரிசன காலனி வடக்கு தெரு குறுக்கு (2வது கிழக்கு புறம்) | B |
| 146 | 9 | கருணாபுரம் மேட்டு தெரு மெயின் வலது | B |
| 147 | 9 | கருணாபுரம் கிழக்கு தெரு மெயின் வலது | B |
| 148 | 9 | கருணாபுரம் புதிய காலனி 1வது தெரு | B |
| 149 | 9 | கருணாபுரம் புதிய காலனி 2வது தெரு | B |
| 150 | 9 | கருணாபுரம் புதிய காலனி 3வது தெரு | B |
| 151 | 9 | கருணாபுரம் புதிய காலனி 4வது தெரு | B |
| 152 | 9 | கருணாபுரம் புதிய காலனி கிழக்கு தெரு | B |
| 153 | 9 | கருணாபுரம் புதிய காலனி மேற்கு தெரு | B |
| 154 | 9 | கருணாபுரம் புதிய காலனி செயின்ட் மேரிஸ் பள்ளித் தெரு | B |
| 155 | 9 | கருணாபுரம் புதிய காலனி 5வது தெரு | B |
| 156 | 9 | ஜோகியர் குடிசை தெரு 1வது தெரு | C |
| 157 | 9 | ஜோகியர் குடிசை தெரு முதல் குறுக்கு தெரு மேற்கு | C |
| 158 | 9 | ஜோகியர் குடிசை தெரு 2வது தெரு | C |
| 159 | 9 | ஜோகியர் குடிசை தெரு 3வது தெரு (மேற்கு கிழக்கு) | C |
| 160 | 9 | துருகம் ரோடு இடதுபுற மெயிக் ரோடு பகுதி மட்டும் | A |
| 161 | 9 | பழைய மாரியம்மன் கோவில் தெரு | A |
| 162 | 9 | பழைய மாரியம்மன் கோவில் 1வது கிழக்கு தெரு | A |
| 163 | 9 | பழைய மாரியம்மன் கோவில் 1வது வடக்கு தெரு | A |

| | | | |
|---|---|---|---|
| 164 | 9 | பழைய மாரியம்மன் கோவில் 2வது வடக்கு தெரு | A |
| 165 | 9 | R.S. நகர் | A |
| 166 | 9 | திருவரங்கம் நகர் மெயின் தெரு | A |
| 167 | 9 | திருவரங்கம் நகர் 1வது தெரு | A |
| 168 | 9 | திருவரங்கம் நகர் 2வது தெரு | A |
| 169 | 9 | திருவரங்கம் நகர் முதலாவது குறுக்கு தெரு | A |
| 170 | 9 | திருவரங்கம் நகர் 2வது குறுக்கு தெரு | A |
| 171 | 9 | ஞானாம்பாள் நகர் முதல் தெரு | A |
| 172 | 9 | ஞானாம்பாள் நகர் 2வது தெரு | A |
| 173 | 9 | பெரியார் நகர் | A |
| 174 | 10 | துருகம் ரோடு(மெயின்ரோடு இடது புறம் பகுதி மட்டும்) | A |
| 175 | 10 | மணிமேகலை நகர்(மெயின் தெரு) | A |
| 176 | 10 | மணிமேகலை நகர்(குறுக்கு தெரு மேற்கு) | A |
| 177 | 10 | மணிமேகலை நகர்(2வது குறுக்கு தெரு மேற்கு) | A |
| 178 | 10 | மணிமேகலை நகர்(முதல் குறுக்கு தெரு கிழக்கு) | A |
| 179 | 10 | மணிமேகலை நகர்(2வது குறுக்கு தெரு கிழக்கு) | A |
| 180 | 10 | ராஜராஜேஸ்வரி நகர்(முதல் தெரு கிழக்கு) | A |
| 181 | 10 | ராஜராஜேஸ்வரி நகர்(2வது தெரு கிழக்கு) | A |
| 182 | 10 | ராஜராஜேஸ்வரி நகர்(முதல் குறுக்கு தெரு மேற்கு) | A |
| 183 | 10 | முருகா நகர் | A |
| 184 | 10 | ராஜேஸ்வரி நகர் | A |
| 185 | 10 | அண்ணாமலை நகர் | A |
| 186 | 10 | ராசி நகர் | A |
| 187 | 10 | ரப்னா நகர் | A |
| 188 | 10 | ராம் நகர் | A |
| 189 | 10 | விநாயாகா நகர்(கோமுகி தெரு) | A |
| 190 | 10 | விநாயாகா நகர்(மாணிக்கம் தெரு) | A |
| 191 | 10 | விநாயகா நகர்(காவேரி தெரு) | A |
| 192 | 10 | விநாயகா நகர்(வைகை தெரு) | A |
| 193 | 10 | விநாயாகா நகர்(தாமிரபரணி தெரு) | A |
| 194 | 10 | விநாயகா நகர்(பாண்டியன் தெரு) | A |
| 195 | 10 | விநாயகா நகர்(அமராவதி தெரு) | A |
| 196 | 10 | விநாயகா நகர்(விரிவாக்கம்) | A |
| 197 | 10 | மாணிக்கம் நகர் (முதலாவது மேற்கு தெரு) | A |
| 198 | 10 | மாணிக்கம் நகர் (2வது கிழக்கு தெரு) | A |
| 199 | 10 | துருகம் ரோடு (கீரனூர் ஏரிக்கரை) | A |
| 200 | 10 | துருகம் ரோடு (மெயின் ரோடு வலதுபுறம் முழுவதும்) | A |
| 201 | 10 | துருகம் ரோடு (டாட்டா கோபுரம் தெரு) | A |
| 202 | 10 | ஸ்ரீ ரங்கன் நகர் ( முதல் தெரு) | A |
| 203 | 10 | ஸ்ரீ ரங்கன் நகர்(குறுக்கு தெரு மேற்கு) | A |
| 204 | 10 | எம் ஆர் என் நகர் (முதல் தெரு இடது) | A |
| 205 | 10 | எம் ஆர் என் நகர்(2வது தெரு இடது) | A |

| | | | |
|---|---|---|---|
| 206 | 10 | எம் ஆர் என் நகர் (3வது தெரு  இடது) | A |
| 207 | 10 | எம் ஆர் என் நகர் (3வது தெருவில் குறுக்கு சந்து) | A |
| 208 | 10 | எம் ஆர் என் நகர் (4வது தெரு இடது) | A |
| 209 | 10 | எம் ஆர் என் நகர் (4வது தெருவில் குறுக்கு சந்து) | A |
| 210 | 10 | மகாலட்சுமி நகர் (முதல் தெரு இடது) | A |
| 211 | 10 | மகாலட்சுமி நகர்(2வது தெரு இடது) | A |
| 212 | 10 | மகாலட்சுமி நகர் விரிவாக்கம் (1வது தெரு) | A |
| 213 | 10 | மகாலட்சுமி நகர் விரிவாக்கம் (2வது தெரு) | A |
| 214 | 10 | மகாலட்சுமி நகர் விரிவாக்கம் (3வது தெரு) | A |
| 215 | 10 | மகாலட்சுமி நகர் விரிவாக்கம் (4வது தெரு) | A |
| 216 | 10 | மகாலட்சுமி நகர் விரிவாக்கம் (5வது தெரு) | A |
| 217 | 10 | மகாலட்சுமி நகர் விரிவாக்கம் (6வது தெரு) | A |
| 218 | 10 | மகாலட்சுமி நகர் விரிவாக்கம் (குறுக்கு மெயின் தெரு) | A |
| 219 | 10 | பாபா நகர் (முதல் தெரு வலது) | A |
| 220 | 10 | பாபா நகர் (முதல் குறுக்கு தெரு) | A |
| 221 | 10 | பாபா நகர் (2வது தெரு வலது) | A |
| 222 | 10 | எம் ஆர் என் நகர் (மெயின் தெரு) | A |
| 223 | 10 | பாபா நகர் (3வது தெரு வலது) | A |
| 224 | 10 | எம் ஆர் என் நகர் (4வது தெரு வலது) | A |
| 225 | 10 | எம் ஆர் என் நகர் (5வது தெரு வலது) | A |
| 226 | 10 | எம் ஆர் என் நகர் (6வது தெரு வலது) | A |
| 227 | 10 | எம் ஆர் என் நகர் (7வது தெரு வலது) | A |
| 228 | 10 | ஜோதி அவென்யூ | A |
| 229 | 10 | எம் எஸ் நகர் முதல் தெரு வலது | A |
| 230 | 10 | எம் எஸ் நகர் 2வது தெரு வலது | A |
| 231 | 10 | எம் எஸ் நகர் 3வது  தெரு இடது | A |
| 232 | 10 | எம் எஸ் நகர் மேற்கு புறதெரு | A |
| 233 | 10 | வேலவன் நகர் | A |
| 234 | 10 | வைஷ்ணவி நகர் | A |
| 235 | 10 | நாகப்பிள்ளை நகர் முதல் தெரு | A |
| 236 | 10 | நாகப்பிள்ளை நகர் 2வது தெரு | A |
| 237 | 10 | நாகப்பிள்ளை நகர் 3வது தெரு | A |
| 238 | 10 | ராஜாராம் நகர் | A |
| 239 | 10 | துருகம் ரோடு எம் ஆர் என் நுழைவு பக்கத்து தெரு | A |
| 240 | 10 | புத்துமாரியம்மன் கோவில் தெரு (முதல் தெரு வலது) | A |
| 241 | 10 | புத்துமாரியம்மன் கோவில் தெரு (2வது தெரு இடது) | A |
| 242 | 10 | புத்துமாரியம்மன் கோவில் தெரு (3வது தெரு இடது) | A |
| 243 | 10 | சுந்தர விநயாகர் கோவில் தெரு (சீத்தாராம் நகர்) | A |
| 244 | 10 | சுந்தர விநாயகர் கோவில் தெரு (2வது தெரு இடது) | A |
| 245 | 10 | சுந்தர விநாயகர் கோவில் தெரு (3வது தெரு இடது) | A |
| 246 | 10 | சுந்தர விநாயகர் கோவில் தெரு (4வது தெரு இடது) | A |
| 247 | 10 | சுந்தர விநாயகர் கோவில் தெரு (மெயின் தெரு) | A |

| | | | |
|---|---|---|---|
| 248 | 10 | சுந்தர விநாயகர் கோவில் தெரு ( முதல் தெரு வலது) | A |
| 249 | 10 | சுந்தர விநாயகர் கோவில் தெரு (2வது தெரு வலது) | A |
| 250 | 11 | செக்கு மேட்டு தெரு | A |
| 251 | 11 | குளத்து மேட்டு தெரு | A |
| 252 | 11 | காசீம் சாயுபு கொல்லை தெரு | A |
| 253 | 11 | மேல் அக்ரஹாரம் | A |
| 254 | 11 | கீழ்த்தக்கா | A |
| 255 | 11 | மணிக்கூண்டு | A |
| 256 | 12 | தந்தை பெரியார் நகர் | B |
| 257 | 12 | சிவன்கோவில் தெரு | A |
| 258 | 12 | கிராமசாவடி தெரு | A |
| 259 | 12 | அகரத்தான் கொல்லை தெரு | B |
| 260 | 12 | உலகப்ப செட்டி கொல்லை தெரு | B |
| 261 | 12 | ஒட்டர் தெரு(திருவள்ளுவர் தெரு) | C |
| 262 | 12 | சித்தேரி தெரு | B |
| 263 | 13 | டி.எம்.எஸ்.நகர் | B |
| 264 | 13 | வைஷ்ணவி நகர் | B |
| 265 | 13 | பி.ஆர்.எஸ் நகர் | B |
| 266 | 13 | ஸ்ரீ அழகர் நகர் | B |
| 267 | 13 | ஸ்ரீ அழகர் நகர் விரிவாக்கம் | B |
| 268 | 13 | ஜெயா கார்டன் | B |
| 269 | 13 | ஸ்ரீ தாயார் நகர் | B |
| 270 | 13 | செல்லம்மாள் நகர் | B |
| 271 | 13 | தாயார் நகர் | B |
| 272 | 13 | ஏமப்பேர் வாய்க்கால் தெரு(கிழக்கு) | B |
| 273 | 13 | கே.பி.ஆர் நகர் | B |
| 274 | 13 | ராஜாஜி நகர் | B |
| 275 | 13 | கே.ஏ.ஜி.நகர் | B |
| 276 | 14 | விளாந்தாங்கல் ரோடு(ஆஸ்டல் பின்புறம்) வலது புறம் மெயின் ரோடு | B |
| 277 | 14 | விளாந்தாங்கல் ரோடு(ஆஸ்டல் பின்புறம்) வலது புறம் மெயின் ரோடு | B |
| 278 | 14 | விளாந்தாங்கல் ரோடு(ஆஸ்டல் பின்புறம்) வலது புறம் 1வது குறுக்கு தெரு | B |
| 279 | 14 | விளாந்தாங்கல் ரோடு(ஆஸ்டல் பின்புறம்) வலது புறம் 2வது குறுக்கு தெரு | B |
| 280 | 14 | விளாந்தாங்கல் ரோடு(ஆஸ்டல் பின்புறம்) வலது புறம் 3வது குறுக்கு தெரு | B |
| 281 | 14 | விளாந்தாங்கல் ரோடு(ஆஸ்டல் பின்புறம்) வலது புறம் 4வது குறுக்கு தெரு | B |
| 282 | 14 | விளாந்தாங்கல் ரோடு(ஆஸ்டல் பின்புறம்) வலது புறம் 5வது குறுக்கு தெரு | B |
| 283 | 14 | விளாந்தாங்கல் ரோடு(ஆஸ்டல் பின்புறம்) வலது புறம் 6வது குறுக்கு தெரு | B |
| 284 | 14 | விளாந்தாங்கல் ரோடு(ஆஸ்டல் பின்புறம்) வலது புறம் 7வது குறுக்கு தெரு | B |
| 285 | 14 | விளாந்தாங்கல் ரோடு (ஆஸ்ட்டல் பின்புறம்) இடது புறம் மெயின் ரோடு | B |
| 286 | 15 | பெருமாள் கோவில் தெரு | A |
| 287 | 15 | கெந்தபொடி சந்து | A |
| 288 | 15 | கமலா நேரு தெரு | A |
| 289 | 15 | கஸ்தூரி பாய் தெரு | A |

| | | | |
|---|---|---|---|
| 290 | 15 | கடைவீதி | A |
| 291 | 15 | சுபேதார் தெரு | A |
| 292 | 15 | கீழ்அக்ரஹார தெரு | A |
| 293 | 15 | ரஜபுத்திர தெரு | A |
| 294 | 16 | சிதம்பரம் பிள்ளை தெரு | A |
| 295 | 16 | சிதம்பரம் பிள்ளை தெரு 1வது தெரு | B |
| 296 | 16 | சிதம்பரம் பிள்ளை தெரு 1வது குறுக்கு தெரு | B |
| 297 | 16 | பாரதி நகர் | B |
| 298 | 16 | சேரலி நகர் | B |
| 299 | 16 | வெள்ளாலர் தெரு | A |
| 300 | 16 | நாட்டுக்கவுண்டர் சந்து | B |
| 301 | 16 | புதுவீட்டு சந்து | B |
| 302 | 16 | தென்னந்தோப்பு தெரு | B |
| 303 | 17 | நேரு தெரு | B |
| 304 | 17 | திருவள்ளுவர் தெரு | B |
| 305 | 17 | விவேகானந்தர் தெரு | B |
| 306 | 17 | பாரதியார் தெரு | B |
| 307 | 17 | கட்டபொம்மன் தெரு | B |
| 308 | 17 | மகாத்மா காந்தி தெரு | B |
| 309 | 17 | தந்தை பெரியார் தெரு | B |
| 310 | 17 | அசோகர் தெரு | B |
| 311 | 17 | இபி காலனி | B |
| 312 | 17 | சேலம் மெயின் ரோடு முதல் குறுக்கு தெரு | B |
| 313 | 17 | ராஜாம்பாள் நகர்(சேலம் மெயின் ரோடு) | B |
| 314 | 17 | அண்ணா நகர் மெயின் ரோடு முதல் குறுக்கு தெரு | B |
| 315 | 17 | அண்ணா நகர் மெயின் ரோடு(தென்கீரனூர் ரோடு) | A |
| 316 | 17 | அண்ணா நகர் முதல் தெரு | B |
| 317 | 17 | அண்ணா நகர் 2வது தெரு | B |
| 318 | 17 | யமுனா தெரு | B |
| 319 | 17 | காவேரி தெரு | B |
| 320 | 17 | சரஸ்வதி நகர் | B |
| 321 | 17 | கங்கை தெரு | B |
| 322 | 17 | பவானி தெரு | B |
| 323 | 17 | EM சுப்ரமணிய ரெட்டியார் தெரு | B |
| 324 | 17 | விஸ்வநாதன் ரெட்டியார் தெரு | B |
| 325 | 17 | அருணாச்சலம் தெரு | B |
| 326 | 17 | அன்னை இந்திரா 1வது தெரு | B |
| 327 | 17 | அன்னை இந்திரா 2வது தெரு | B |
| 328 | 17 | சிதம்பரனார் தெரு | B |
| 329 | 17 | பாரதிதாசன் தெரு | B |
| 330 | 17 | கண்ணதாசன் தெரு | B |
| 331 | 17 | கம்பர் தெரு | B |

| | | | |
|---|---|---|---|
| 332 | 18 | கவரைத்தெரு | A |
| 333 | 18 | நியூ சுமங்கலி நகர் | A |
| 334 | 18 | இடையர் சந்து | A |
| 335 | 18 | பாலகிருஷ்ண நாயுடு தெரு | A |
| 336 | 18 | கணக்கு பிள்ளை தெரு | A |
| 337 | 18 | வெள்ளாளர் தெரு | A |
| 338 | 18 | ஸ்ரீ கோவிந்த ராஜன் நகர் | A |
| 339 | 18 | ராஜாம்பாள் நகர் ( சேலம் மெயின் ரோடு) | A |
| 340 | 18 | எஸ் வி கே நகர் | A |
| 341 | 18 | வீரமணி நகர் | A |
| 342 | 19 | அண்ணாமலை நகர் | B |
| 343 | 19 | பள்ளிக்கூடத் தெரு | B |
| 344 | 19 | பள்ளிக்கூடத் தெரு 1வது தெரு | B |
| 345 | 19 | பள்ளிக்கூடத் தெரு 2வது தெரு | B |
| 346 | 19 | பள்ளிக்கூடத் தெரு 3வது தெரு | B |
| 347 | 19 | காளியம்மன் கோவில் தெரு | B |
| 348 | 19 | கரியப்பா நகர் மெயின் ரோடு | B |
| 349 | 19 | கரியப்பா நகர் 1வது தெரு (இடது புறம்) | B |
| 350 | 19 | கரியப்பா நகர் 1வது குறுக்கு தெரு | B |
| 351 | 19 | கரியப்பா நகர் 1வது குறுக்கு தெரு (வலது புறம்) | B |
| 352 | 19 | கரியப்பா நகர் 2வது குறுக்கு தெரு (வலது புறம்) | B |
| 353 | 19 | அய்யப்பா நகர் | B |
| 354 | 19 | ஜெயமணி நகர் | B |
| 355 | 19 | விஜயலட்சுமி நகர் | B |
| 356 | 19 | காட்டுக்கொட்டா | B |
| 357 | 19 | ஜே.ஜே. நகர் | B |
| 358 | 19 | வள்ளிமுருகன் நகர் | B |
| 359 | 19 | அங்காளபரமேஸ்வரி நகர் | B |
| 360 | 19 | மூகாம்பிகை நகர் | B |
| 361 | 20 | சேலம்மெயின் ரோடு | A |
| 362 | 20 | சேலம்மெயின் ரோடு 1வது தெரு | A |
| 363 | 20 | சேலம்மெயின் ரோடு 2வது தெரு | A |
| 364 | 20 | குளத்துமேட்டுத் தெரு | A |
| 365 | 20 | முருகன் கோயில் தெரு | A |
| 366 | 20 | வடக்கு தெரு | B |
| 367 | 20 | அக்ரஹாரத் தெரு | B |
| 368 | 20 | அக்ரஹாரத் தெரு 1வது தெரு | B |
| 369 | 20 | அக்ரஹாரத் தெரு 2வது தெரு | B |
| 370 | 20 | பெருமாள் கோயில் தெரு | B |
| 371 | 20 | தெற்கு தெரு | B |
| 372 | 20 | தொம்பர் தெரு | B |
| 373 | 20 | கிழக்கு தெரு | B |

| | | | |
|---|---|---|---|
| 374 | 20 | மாரியம்மன் கோயில் தெரு | B |
| 375 | 20 | வேலன் நகர் | B |
| 376 | 20 | முல்லை நகர் | B |
| 377 | 20 | சக்தி நகர் | B |
| 378 | 20 | வெற்றிவேல் நகர் | B |
| 379 | 20 | திருமலை நகர் | B |
| 380 | 20 | RJS நகர் | B |
| 381 | 21 | ராமச்சந்திரா நகர் மெயின் ரோடு | A |
| 382 | 21 | ராமச்சந்திரா நகர் 1வது தெரு | A |
| 383 | 21 | ராமச்சந்திரா நகர் 2வது தெரு | A |
| 384 | 21 | ராமச்சந்திரா நகர் 3வது தெரு | A |
| 385 | 21 | ராமச்சந்திரா நகர் கேஸ் ஆபிஸ் தெரு | A |
| 386 | 21 | ராமச்சந்திரா நகர் கேஸ் ஆபிஸ் தெரு (இடது புறம்) 1வது தெரு | A |
| 387 | 21 | ராமச்சந்திரா நகர் கேஸ் ஆபிஸ் தெரு (இடது புறம்) 2வது தெரு | A |
| 388 | 21 | ராமச்சந்திரா நகர் கேஸ் ஆபிஸ் தெரு (இடது புறம்) 3வது தெரு | A |
| 389 | 21 | ராமச்சந்திரா நகர் கேஸ் ஆபிஸ் தெரு (இடது புறம்) 4வது தெரு | A |
| 390 | 21 | ராமச்சந்திரா நகர் கேஸ் ஆபிஸ் தெரு (வலது புறம்) 1வது தெரு | A |
| 391 | 21 | ராமச்சந்திரா நகர் கேஸ் ஆபிஸ் தெரு (வலது புறம்) 2வது தெரு | A |
| 392 | 21 | ராமச்சந்திரா நகர் கேஸ் ஆபிஸ் தெரு (வலது புறம்) 3வது தெரு | A |
| 393 | 21 | ராமச்சந்திரா நகர் கேஸ் ஆபிஸ் தெரு (வலது புறம்) 4வது தெரு | A |
| 394 | 21 | ஏமப்பேர் புதிய காலனி 1வது தெரு | C |
| 395 | 21 | ஏமப்பேர் புதிய காலனி 2வது தெரு | C |
| 396 | 21 | ஏமப்பேர் புதிய காலனி 1வது குறுக்கு தெரு | C |
| 397 | 21 | ஏமப்பேர் புதிய காலனி 1வது குறுக்கு தெரு (வலது புறம்) | C |
| 398 | 21 | ஏமப்பேர் தென்கீரனூர் ரோடு | C |
| 399 | 21 | மூப்பனார் கோயில் தெரு 1வது தெரு | C |
| 400 | 21 | மூப்பனார் கோயில் தெரு 2வது தெரு | C |
| 401 | 21 | மூப்பனார் கோயில் தெரு 3வது தெரு | C |
| 402 | 21 | ஏமப்பேர் காலனி கிழக்கு தெரு | C |
| 403 | 21 | ஏமப்பேர் காலனி கிழக்கு 1வது குறுக்கு தெரு | C |
| 404 | 21 | ஏமப்பேர் காலனி கிழக்கு 2வது குறுக்கு தெரு | C |
| 405 | 21 | மாரியம்மன் கோயில் தெரு | C |
| 406 | 21 | தெற்கு தெரு | C |
| 407 | 21 | ஜீவமணி ஹைடெக் சிட்டி | B |
| 408 | 21 | பாலாஜி நகர் | B |
| 409 | 21 | ரமனர் தெரு | B |
| 410 | 21 | வள்ளலார் தெரு | B |

மேற்காணும் பட்டியலில் உள்ள தெருக்கள் மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்யாமல் விடுபட்டுள்ள சாலைகள் / தெருக்கள் / சந்துகள் ஆகியவற்றின் பட்டியல் மன்றத்திற்கு வைக்கப்பட்டு, உயர்த்தப்பட வேண்டிய மண்டலங்களுக்கான அடிப்படை மதிப்பீடு நிர்ணயம் செய்திட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. கள்ளக்குறிச்சி நகராட்சி மாவட்ட தலைநகரத்தில் அமைந்துள்ளதால், இந்நகராட்சியின் எதிர்கால வளர்ச்சியினை கருத்தில் கொண்டும், பல்வேறு அடிப்படை மற்றும் உள்கட்டமைப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு உள்ள மண்டலங்களுக்கான அடிப்படை மதிப்பீடு உயர்வு செய்யவும், பொது சொத்துவரி சீராய்வினை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. ‘A’மண்டலத்தில் வகைப்படுத்தப்பட்டுள்ள 189 தெருக்கள் மற்றும் சாலைகளுக்கான அடிப்படை மதிப்பு சதுரஅடி ஒன்றுக்கு ரூபாய் 0.50 பைசாவிலிருந்து ரூ. 0.25 பைசாஉயர்வு செய்து ரூ. 0.75 பைசாவாக நிர்ணயம் செய்யப்பட்டதை மன்றம் உறுதி செய்து அனுமதிக்கலாம்.
4. ‘B’மண்டலத்தில் வகைப்படுத்தப்பட்டுள்ள 203 தெருக்கள் மற்றும் சாலைகளுக்கான அடிப்படை மதிப்பு சதுரஅடி ஒன்றுக்கு ரூபாய் 0.30 பைசாவிலிருந்து ரூ. 0.20 பைசா உயர்வு செய்துரூ.0.50 பைசாவாக நிர்ணயம்செய்யப்பட்டதை மன்றம் உறுதி செய்து அனுமதிக்கலாம்.
5. ‘C’மண்டலத்தில் வகைப்படுத்தப்பட்டுள்ள 18 தெருக்கள் மற்றும் சாலைகளுக்கான அடிப்படை மதிப்பு சதுரஅடி ஒன்றுக்கு ரூபாய் 0.20 பைசாவிலிருந்து ரூ. 0.10 பைசா உயர்வு செய்துரூ.0.30 பைசாவாக நிர்ணயம்செய்யப்பட்டதை மன்றம் உறுதி செய்து அனுமதிக்கலாம்.
6. பொதுமக்களுக்கு சொத்துவரி சீராய்வு குறித்து தினசரி நாளிதழ் மூலம் அறிவிப்பு செய்திடவும், அரசிதழில் வெளியிடுவதற்கும் ஆகும் செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 992/2022/அ1)**

**பொருள் எண். 02**

கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்திற்கு வந்து செல்லும் பேருந்துகளுக்கு நுழைவு கட்டணம் வசூலிக்கும் உரிமம் திரு.எம்.கண்ணன் என்பவருக்கு 01.04.2021 முதல் 31.03.2022 வரை குத்தகை உரிமம் புதுப்பித்து வழங்கப்பட்டது. நுழைவு கட்டணத்தை கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு செலுத்த கோரி பல்வேறு அறிவிப்புகள் வழங்கியும் குத்தகைதாரர் பேருந்து நிலைய நுழைவு கட்டண குத்தகை தொகையினை செலுத்தாமல் நிலுவை வைத்துள்ளதை தொடர்ந்து, அவருடைய உரிமத்தை 31.03.2022ல் இரத்து செய்து ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் திரு.எம்.கண்ணன் என்பவர் கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு செலுத்த வேண்டிய பேருந்து நிலைய நுழைவு கட்டண நிலுவை தொகையினை சட்ட ரீதியாக வசூலித்திடுவதற்கும், மேற்படி பேருந்து நிலைய நுழைவு கட்டண குத்தகை உரிமத்தினை பொது ஏலம் விடவும், அவ்வாறு பொது ஏல நடைமுறைகள் இறுதி செய்யும் வரை வருவாய் இழப்பு ஏற்படாமல் பேருந்து நுழைவு கட்டணத்தை தினசரி துறை மூலம் வசூல் செய்வதற்கு மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது ஏலம் குறித்த நடைமுறைகள் இறுதி செய்யும் வரை துறை மூலம் வசூல் செய்திடலாம்.
3. பேருந்து நிலைய நுழைவு கட்டணத்தை சட்ட ரீதியாக வசூலிப்பதற்கு நடவடிக்கை எடுக்கலாம்.
4. ஏல நடவடிக்கைக்கான செலவினை மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். /2022/அ1**

**பொருள் எண். 03**

கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு சொந்தமான தினசரி நாளங்காடி வளாகத்தில் அமைந்துள்ள கட்டண கழிப்பறை 2021-2022 ஆம் ஆண்டில் பொது ஏலம் விடப்பட்டது. அக்கட்டண கழிப்பறை குத்தகை உரிமத்தை எவரும் எடுக்க முன்வராத காரணத்தால் 2021-2022 நிதியாண்டு முழுவதும் துறை மூலம் வசூல் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. தற்போது 2022-2023 இந்நிதியாண்டில் பொது ஏலம் விடவும், அவ்வாறு பொது ஏல நடைமுறைகள் இறுதி செய்யும் வரை வருவாய் இழப்பு ஏற்படாமல் கட்டண கழிப்பறை குத்தகை உரிமத்தை தினசரி துறை மூலம் வசூல் செய்வதற்கு மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. பொது ஏலம் குறித்த நடைமுறைகள் இறுதி செய்யும் வரை துறை மூலம் வசூல் செய்திடலாம்.

3. ஏல நடவடிக்கைக்கான செலவினை மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். /2022/அ1)**

**பொருள் எண். 04**

கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு சொந்தமான தினசரி நாளங்காடி மற்றும் பேருந்து நிலைய கடைகளுக்கான குத்தகை உரிமை காலம் 31.03.2021-ல், ஒன்பது ஆண்டு காலம் முடிவடைந்த நிலையில், அரசாணை (நிலை) எண்.92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை, நாள்.03.07.2007ல் தெரிவிக்கப்பட்டுள்ள வழிக்காட்டு நெறிமுறைகளின்படி ஒன்பது ஆண்டுகளுக்கு பின்னர் குத்தகை வாடகை தொகையினை மறு மதிப்பீடு செய்யப்பட வேண்டும். தற்போது கடை நடத்தி வரும்குத்தகைதாரர்களின், குத்தகை கால நீட்டிப்புகான இசைவு கடிதத்தின் அடிப்படையில் மேலும் மூன்று தொகுப்பு கால ஆண்டுகள் கால நீட்டிப்பு செய்வதற்கு அரசாணையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

எனவே அரசாணைக்கிணங்க, குத்தகையினை புதுபித்தல் நடமுறைகளை மேற்கொள்ளும் பொருட்டு, தற்போது நிலவி வரும் அங்காடி மதிப்பீட்டின் அடிப்படையிலும், வழிக்காட்டி மதிப்பீட்டின் அடிப்படையிலும் மற்றும் பொதுப்பணித்துறை மதிப்பீட்டின் அடிப்படையிலும் கணக்கீடு செய்து அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள குறைந்தபட்ச 15 சதவீத உயர்வு தொகையினை விட அங்காடி மதிப்பீடு, வழிக்காட்டி மதிப்பீடு, பொதுப்பணி துறை மதிப்பீட்டுடன் ஒப்பீட்டு அவற்றில் சராசரி தொகையினை விட உயர்ந்தபட்ச உயர்வு தொகையை இறுதி செய்வதற்கு, இவ்வலுவலக ந.க.எண்.அ1/631/2021, நாள்.29.12.2021ல் சமர்ப்பிக்கப்பட்ட முன் மொழிவுகள் மற்றும்நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களின்கடிதம் ந.க.எண்.5527/2016/அ2, நாள்.14.03.2022-ன்படி தலைமையில் கண்காணிப்பு குழு அமைக்கப்பட்டு 18.03.2022-ல் மண்டல குழு தலைவர், ஒருங்கிணைப்பாளர் மற்றும் உறுப்பினர்களால் முன் மொழிவு ஏற்றுக்கொள்ளப்பட்டு கீழ்க்கண்ட இனங்களின் குத்தகை உரிமை காலத்தை அடுத்த மூன்று தொகுப்பு கால ஆண்டுகளுக்கு குத்தகை உரிமம் புதுப்பித்து காலநீட்டிப்பு செய்யப்பட்டு குழுவால் அனுமதிக்கப்பட்டுள்ளதைமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | கடைகளின் பெயர் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | நாளங்காடி கடைகள் | 98 |
| 2 | பொது நிதி கடைகள் | 9 |
| 3 | வெற்றிலை கடைகள் | 7 |
| 4 | பூக்கடைகள் | 8 |
| 5 | பழக்கடைகள் | 12 |
| 6 | மேடை கடைகள் | 20 |
| 7 | சிறிய கடைகள் | 10 |
| 8 | நடுத்தர கடைகள் | 26 |
| 9 | பேருந்து நிலைய கடைகள் | 40 |
| 10 | பேருந்து நிலைய வெளிப்புற கடைகள் | 23 |
| **மொத்தம்** | | **253** |

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. கடை வாடகை தொகையினை மறுநிர்ணயம் செய்யும் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட 253 கடைகளுக்கான குத்தகை காலத்தினை நீட்டிப்பு செய்த ஆணையை, மன்றம் பார்வையிட்டு, பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.        /2022/அ1)

**பொருள் எண். 05**

கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு சொந்தமான தினசரி நாளங்காடி மற்றும் பேருந்து நிலைய கடைகளுக்கான குத்தகை உரிமை காலம் 31.03.2021-ல், ஒன்பது ஆண்டு காலம் முடிவடைந்த நிலையில் 307 கடைகளில் 253 கடைகளுக்கு காலநீட்டிப்பு செய்யப்பட்டு குத்தகை உரிமம் குத்தகை வாடகை நிர்ணயம் செய்யும் கண்காணிப்பு குழுவால் புதுப்பிக்கப்பட்டது. மீதம் உள்ள 54 கடைகளின் குத்தகைதாரர்கள் வாடகை பாக்கி செலுத்தாத காரணத்தினால் பல்வேறு முறை வாடகை தொகை செலுத்த கோரி அறிவிப்புகள் வழங்கியும் வாடகை செலுத்தாத காரணத்தினால் பொது ஏலம் கொண்டு வர மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது ஏல நடைமுறைகளை செயல்படுத்தலாம்.

**(ந.க.எண். /2022/அ1)**

**பொருள் எண். 06**

கள்ளக்குறிச்சி நகராட்சி மாவட்ட தலைநகரத்தில் அமைந்துள்ளதால், இந்நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டத்தினை செயல்படுத்திட, தல ஆய்வுப் பணிகள் மற்றும் விரிவான திட்ட கருத்துரு தயார் செய்திட கோரி, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 19829/2021/UGSS-1, நாள். 28.08.2021-ல், மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வடியால் வாரியம், சென்னை அவர்களிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செயற்பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், கள்ளக்குறிச்சி அவர்களின் கடிதம் எண். 12/F.KKI-UGSS/DO/KKI/2022, நாள். 12.01.2022ல் இந்நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டத்தினை செயல்படுத்திட ஆய்வு அறிக்கை மற்றும் விரிவான திட்ட கருத்துரு தயார் செய்வதற்கான கட்டணம் ரூ. 96.00 இலட்சத்தினை செலுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது கள்ளக்குறிச்சி நகராட்சியில் போதிய நிதி நிலைமை இல்லாததால், பாதாள சாக்கடைத் திட்ட செயலாக்கத்திற்கு தேவையான ஆய்வு பணிகள் மேற்கொண்டு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணியினை தமிழ்நாடு நகர்ப்புர உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவன (TNUIFSL) மான்ய நிதி (PDGF) மூலம் கலந்தாலோசகர் நியமித்து, கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு பாதாள சாக்கடை திட்டத்திற்கு விரிவான திட்ட கருத்துரு தயார் செய்திட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தமிழ்நாடு நகர்ப்புர உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவன (TNUIFSL) மான்ய நிதி (PDGF) மூலம் கலந்தாலோசகர் நியமித்து, பாதாள சாக்கடை திட்ட ஆய்வு பணிகளை மேற்கொண்டு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 2226/2021/இ1)**

**பொருள் எண். 07**

சென்னை உயர் நீதிமன்ற வழக்கு எண். W.P.No 5674/2022ல் திரு. இருதயநாதன் என்பவர் வழக்கு தொடர்ந்துள்ளர். இவ்வழக்கில் கள்ளக்குறிச்சி நகராட்சி ஆணையாளரை 5-வது பிரதிவாதியாக சேர்த்துள்ளார். எனவே இவ்வழக்கில் நகராட்சி சார்பில் திரு. P. ஸ்ரீநிவாஸ், சென்னை உயர் நீதி மன்ற வழக்கறிஞர்அவர்கள் ஆஜராகி வழக்கை நடத்திடவும்அதற்கான வழக்காடு கட்டணத்தை செலுத்தவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். /2022/அ1)**

**பொருள் எண். 08**

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள பொதுமக்களிடமிருந்து அவ்வப்போது வரப்பெற்ற புகாரில் நகர பகுதியில் தெரு நாய்களினால் தொல்லை அதிகரிப்பதாகவும், பொது மக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையூறு ஏற்படுவதாகவும், குழந்தைகளை அச்சுறுத்தி வருவதாகவும் புகார்கள் வந்த வண்ணம் உள்ளது. எனவே, நகராட்சி ஆணையாளர் மற்றும் நகர்மன்ற தலைவர் அவர்களின் அறிவுரையின் படி இந்நகராட்சி பகுதியில் சுற்றி திரியும் தெரு நாய்களை கணக்கெடுக்கப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதில் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு பகுதிகளில் சுற்றிதிரியும் தெரு நாய்களின் எண்ணிக்கை 1034 எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, பொதுமக்களின் நலன் கருதியும், பணியின் அவசர, அவசியம் கருதியும், அரசாணை (நிலை) எண்.181, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள். 05.04.2013-ல் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளுக்குட்பட்டு, இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் சுற்றித்திரியும் தெரு நாய்களை பிடித்து கருத்தடை அறுவை சிகிச்சை மேற்கொண்டு, வெறிநாய்களுக்கு தடுப்பூசி போடும் பணிகளை மேற்கொள்ளவும், அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி விலைப்புள்ளிகள் கோரி பணிகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 953/2022/எச்1)**

**பொருள் எண். 09**

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட துருகம் ரோடு, சித்தேரி தெரு, கருணாபுரம் மற்றும் க.மாமனந்தல் ரோடு ஆகிய பகுதிகளில் தெருப்பகுதிகளில் சுற்றித்திரியும் பன்றிகளால் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்பட்டு வருகிறது. மேலும், நகராட்சிக்கு சொந்தமான துருகம் சாலையில் அமைந்துள்ள நுண்ணுயிர் உரக்கிடங்கில் தினசரி சேகரமாகும் குப்பைகளை தரம்பிரித்து உலர வைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. அவ்வாறு உலர வைக்கப்பட்டுள்ள குப்பைகளை சுற்றித்திரியும் பன்றிகளால் அசுத்தம் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. இது தொடர்பாக பன்றி வளர்ப்பவர்களிடம் பலமுறை அறிவிப்பு கடிதம் வழங்கியும், காவல் துறை மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டும் பன்றி வளர்ப்பவர்கள் தெருக்களில் பன்றிகளை சுற்றிதிரியும்நடவடிக்கையை தொடர்ந்து மேற்கொண்டு வருகிறார்கள். இதனால் பொது சுகாதார சீர்கேடு ஏற்படுவததோடு, பொதுமக்களுக்கு தொற்று நோய் பரவவும் வாய்ப்புள்ளது. எனவே, அனுமதியின்றி இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட தெருக்களில் சுற்றிதிரியும் பன்றிகளை தனியார் ஆட்களை கொண்டு பிடித்து நகரப்பகுதிக்கு அப்பால் கொண்டு செல்வதற்கு, அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.50000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி விலைப்புள்ளிகள் கோரி பணிகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 992/2022/எச்1)**

**பொருள் எண். 10**

கள்ளக்குறிச்சி நகராட்சிக்குச் சொந்தமான பேருந்து நிலையத்திலிருந்து திருப்பதிக்கு சாமி தரிசனம் செய்வதற்கு தினசரி அதிக அளவில் பக்தர்கள் சென்று வருகின்றனர். தற்போது, ஆந்திர மாநில போக்குவரத்து கழகத்தின் மூலம் திருப்பதிக்கு நேரடி போக்குவரத்து சேவை துவங்கப்பட்டுள்ளது. இந்த நேரடி போக்குவரத்து சேவையினை பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் முன்பதிவு வசதிகளை மேற்கொள்வதற்காக கணினி உதவியுடன் முன்பதிவு செய்வதற்கு, திருமதி. S.சரிதா க/பெ சுப்பரமணியன், கோட்டைமேடு, கள்ளக்குறிச்சி என்பவருக்கு ஆந்திர போக்குவரத்து துறையினரால் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி அனுமதியின் பேரில், இந்நகராட்சி பேருந்து நிலையத்தில் கடை எண். 04, 05-ற்கு இடைபட்ட காலியிடத்தில் தற்காலிகாலிக அமைப்பு ஏற்படுத்தி, வாடகை அடிப்படையில் வழங்கிடவும், அதற்கான வாடகை தொகையினை நிர்ணயம் செய்யவும் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. ஆந்திர போக்குவரத்து துறையினரால் அனுமதி அளிக்கப்பட்ட திருமதி. S.சரிதா க/பெ சுப்பரமணியன், கோட்டைமேடு, கள்ளக்குறிச்சி என்பவருக்கு வாடகைக்கு விடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். /2022/அ1)

**பொருள் எண். 11**

கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தில் உள்ள கடைகளின் குத்தகைதாரர்கள் நீண்ட காலமாக நகராட்சிக்குச் செலுத்தவேண்டிய வாடகை தொகையினை செலுத்தாமல் நிலுவையிலேயே உள்ளது.இந்நகராட்சியின் மூலம் பலமுறை நேரடியாக அறிவுறுத்தியும், அறிவிப்புகள் பல வழங்கியும் இதுநாள் வரையில் வாடகை தொகையினை செலுத்தப்படாமல் நிலுவையிலேயே உள்ளது. இதனால் கணினியில் கேட்பு மட்டும் எழுப்பப்பட்டுள்ளதால், குத்தகைதாரர்களின் வாடகை நிலுவை தொகையும் நாளுக்குநாள் அதிகரித்த வண்ணம் உள்ளது. எனவே, மேற்படி வாடகை தொகை செலுத்தாத குத்தகைதாரர்களின் வைப்பு தொகையிலிருந்து வாடகை தொகையினை ஈடு செய்திடவும், மீதமுள்ள தொகையினை சட்ட ரீதியாக வசூலிக்க நடவடிக்கை மேற்கொள்ளவும், அக்கடைகளை பூட்டி, பொது ஏலத்தில் கொண்டு வருவதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. வாடகை தொகை செலுத்தாத குத்தகைதாரர்களின் வைப்பு தொகையில் வாடகை தொகையினை ஈடு செய்யவும், மீதமுள்ள தொகையினை சட்ட ரீதியாக வசூலிக்க நடவடிக்கை மேற்கொள்ளவும், கடைகளை பொது ஏலத்தில் கொண்டு வரவும் மன்றம் அனுதிக்கலாம்.
3. பொது ஏல நடைமுறைகளை செயல்படுத்தலாம்.

**(ந.க.எண். /2022/அ1)**

**தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது, நாள்.11.04.2022**

**அனுமதிக்கப்பட்டது.**

ஒம்(xxxxxxxxxxxx)

**திரு.இரா.சுப்ராயலு,**

**//உண்மை நகல்//**நகர்மன்ற தலைவர்

கள்ளக்குறிச்சி நகராட்சி

**ஆணையாளர்**

**கள்ளக்குறிச்சி நகராட்சி**